IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.159/2012
Deposition of witness for PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாலமுருகன் | Caste | : | |
| Father Name | : | திருநீலகண்டன் | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of March, 2026.

1 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–

1. நான் இந்த வழக்கில் 2 ஆம் வாதி என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் விவரங்களை தெரிந்து தான் கையொப்பம் செய்தேன். நான் 12 ஆம் வகுப்பு படித்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை ஆங்கிலத்தில் தான் போட்டுள்ளோம். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எங்கு தயார் செய்யப்பட்டது யார் தயார் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. என்ன பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் என்னுடைய அம்மா வாழ்ந்த வீடு எங்களுக்கு வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளோம். என்னுடைய தாயாரை திருமணம் செய்து கொடுத்த ஊர் அப்துல்லா புரம் என்று சொன்னால் இல்லை சோழிங்கர் பக்கம் உள்ள அப்துல்லா புரம் ஆகும்.

2. மேற்படி கிராமத்தில் நாங்கள் வசிக்கும் போது எனது தந்தை இறந்து விட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு சேவூரில் உள்ள எனது தாய்மாமா வீட்டிற்கு வந்துவிட்டோம் என்றால் சரிதான். என் தாய்மாமா மகளை தான் நான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். ஒரு வாரம் தான் அவர் என்னுடன் இருந்தார் அதன் பிறகு பிரிந்து சென்று விட்டார். தற்போது நான் சேவூரில் தான் வசித்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக நான் இன்றைக்கு தான் நீதிமன்றம் வருகிறேன் என்றால்

சரிதான். அதுவும் எனது உடன் பிறந்தவர் முதல் வாதி தான் சாட்சி சொல்ல இங்கு அழைத்து வந்துள்ளார் என்றால் சரிதான்.

3. இந்த வழக்கில் என்னென்ன வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா சொத்து குறித்து என் அம்மா பெயரில் பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரமோ, பட்டாவோ நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அதன் பிறகு என் மாமா மகள் பிரிந்து சென்றவுடன் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் தற்போது 2ஆவது திருமணம் செய்து கொண்டேன். எனக்கு குழந்தைகள் உள்ளது. தாவா சொத்து எந்த காலத்திலும் என் தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து உண்மையிலே எனது தாயார் பெயரில் இருந்தால் அதற்குண்டான ஆவணத்தை முதல் வாதியுடன் சேர்ந்து தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதைப் பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களை பார்ப்பதற்கு கூட நாங்கள் முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>2 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

1. 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகளிடமிருந்து தாவா சொத்து எங்களுக்கு உண்டானது என்று எந்தவொரு ஆவணமும் பெறாத நிலையில் நாங்கள் அவர்களை சேர்த்தது சரியல்ல என்றால் சரியல்ல. 3 ஆம் பிரதிவாதி முதல் பிரதிவாதியான உமாமகேஸ்வரிக்கு முதல்நிலை பட்டா கொடுத்துள்ளார் அதன் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. மேற்படி பட்டாவை உறுதிப்படுத்துவதற்காக பட்டா எண்.601 குறித்து தலைமை வட்டாட்சியர் காட்பாடி பட்டா கொடுத்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சேவூர் கிராம நிர்வாக அலுவலர் B3 ஆவணத்தை கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. சொத்து எங்களுக்கு இல்லை என்பதால் தான் வருவாய் துறையில் இருந்து எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது எனது தாயாருக்கு சொந்தமானது என்பதற்காக 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகளிடம் எந்தவொரு மனுவும் கொடுத்து நாங்கள் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. ஆகவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை– இல்லை.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI